# “தீவாளித் திருநாள் [தீபாவளி] பற்றிய விளக்கக் கட்டுரைகள்”




**அருளியவர்:**

**இந்துவேத நாயகம்,**
**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்**


காணிக்கை ரூ.5/-

# <u>மெய்யான இந்து மதமும், பொய்யான ஹிந்து மதமும்</u>

“இந்து மதத்தில் முதலாளித்துவமும், மடமையும், ஏமாற்றும், சுரண்டலும், பொய்யும், புளுகும், ஆபாசமும் கலந்து <u>உருவாக்கப் பட்ட கலப்பட மதம்தான் *ஹிந்து மதம்*</u>. *ஹிந்து மதத்தின்* தலைவர்கள் பிருமணர்களே; *ஹிந்து மதத்தின்* மொழி சமசுக்கிருதமே; *ஹிந்து மதத்தின்* ஆயுள் மூவாயிரமாண்டுகளே.

ஆனால், **இந்து மத**த் தலைவர்கள் தமிழர்களே; **இந்து மத**த்தின் மொழி அமுதத் தமிழ்மொழியே; **இந்து மத**த்தின் ஆயுள் (கி.பி.2015இல்) 43,73,115 ஆண்டுகள் இம்மண்ணுலகில் பெற்றுள்ளது. இது பல நூருயிரம் கோடி ஆண்டுகளாக விண்வெளி அண்டங்களிலும், பேரண்டங்களிலும் வாழ்ந்து வரும் மதம்.

<u>தமிழ்மொழி வழியாகத்தான்</u> 48 வகைச் சித்தர்கள், வழிபடு நிலையினர்கள், வழிபாட்டு நிலையங்கள், கருவறை மூலவர்கள், அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள், ஆச்சாரியார்கள்.... .... எனப்படும் அனைவரும் பயிற்சி, முயற்சி, தேர்ச்சி, முதிர்ச்சி பெற முடியும்.

எனவேதான் **இந்து மத**மும் *ஹிந்து மத*மும் கலப்படச் சண்டைகளால் மக்களைக் கலக்கமும், குழப்பமும், சலிப்பும், ஏமாற்றமும் அடைந்து புதிய மதங்களைத் தேடி நாடிச் செல்லச் செய்தது.

இந்த நிலையில் செய்ய வேண்டியன என்னென்ன? அவற்றை யார்? யார்? எவ்வப்பொழுது? எப்படி யெப்படிச் செய்ய வேண்டும்?!?!... என்ற உண்மைகள் எங்களுக்குத் தெரியும், உங்களுக்கு?!?!?!....”

**- குருதேவர், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியது.**

# “தீபாவளிக்கும் நரகாசுரனுக்கும் தொடர்பில்லை...”

ஓர் அசுரனை, அரக்கனை, அநீதிக் காரனை ... அழித்ததற்காக ஒரு திருநாள், திருவிழா, கொண்டாட்டம்.... தோன்றியிருக்குமா?

**இருக்காது**. ஏனெனில், அந்தகன், இடும்பன், இராவணன், இரணியன், சலந்தரன், பகன்..... முதலியோரின் அழிவுக்குத் திருவிழாவோ! திருநாளோ! கொண்டாட்டமோ! .... தோற்றுவிக்கப் படவில்லை.

பிறகு ஏன் நரகாசுரன் கதைக்கும், தீபாவளிக்கும் தொடர்பு உண்டாக்கப் பட்டது?

**பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்தில்** தீபாவளித் திருநாள் ‘சோதி வழிபாடு’, ‘தீப வழிபாடு’, ‘ஒளி வழிபாடு’, ‘சூரிய வழிபாடு’, ‘சந்திர வழிபாடு’, ‘விண்மீன் வழிபாடு’, ‘முத்தீ ஓம்பல் வழிபாடு’, ‘நெருப்பு வழிபாடு’, .... என்று சிறப்புக்களைப் பெற்றுள்ளது. இத் திருநாளில் இந்துமதக் கூட்டு வழிபாட்டால் இந்துமத ஒற்றுமையும், பற்றும், பாசமும் கட்டிக் காக்கப் பட்டன.

“ஒவ்வொரு இந்துவும் தீபாவளியை முன்னிட்டு ஏழைகளுக்கும், நண்பர்களுக்கும், அன்னியர்களுக்கும் நீராட நல்லெண்ணை, சீயக்காய்; கட்டிக் கொள்ளப் புதிய ஆடைகள், சரி சமமாக உட்கார்ந்து உண்ண அறுசுவை உணவு; இயன்ற அளவு தமது ஆண்டு வருமானத்தில் சரியான கணக்குக்கு உரிய தொகையில் ஆறில் ஒரு பங்கு தொகை [ஆறில் ஒரு பங்கை ஏழைகளுக்கும், நண்பர்களுக்கும், அன்னியர்களுக்கும் நன்கொடையாக வழங்குவது]

முதலியனவற்றை வழங்க வேண்டும்...” - என்று கூறுவதுதான் **மெய்யான இந்துமதம்**. நரகாசுரன் கதையைக் கூறுவதுதான் *பொய்யான ஹிந்து மதம்*. <u>இந்த *ஹிந்து மதமே* பிருமணருடையது. **இந்து மத**த்தைக் கெடுத்ததே இந்த *ஹிந்து மதம்*தான்</u>.

‘**இந்து மதம்**’ என்பது (கி.பி.2015ஆம் ஆண்டில்) 43,73,115 ஆண்டுகளுக்கு முன்னால் ‘இளமுறியாக் கண்டம்’ என்கின்ற ‘குமரிக் கண்டத்தில்’ (The Lost Lemuria continent) பதினெண்சித்தர்கள், பதினெட்டாம்படிக் கருப்புகள், ... என்பவர்களால் உருவாக்கப்பட்டது. இந்த <u>**இந்து மதம்** அமுதத் தமிழ் மொழியில்தான் வெளியிடப் பட்டது.</u> இதனுடைய நூல்களும் (Books), செயல் திட்டங்களும் (Practices), திருநாள்களும் (Festivals) வீம்புக்கென்றே பிருமணர்களால் தவறான விளக்கங்களால், செய்திகளால் பாழ்படுத்தப் பட்டு விட்டன. எனவேதான், தமிழின இந்துமதக் குருபீடம், குருமகாசன்னிதானம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் ‘**மெய்யான இந்துமதமும் *பொய்யான ஹிந்துமதமும்***’ என்று தலைப்பிட்டே கருத்துரைகள் வழங்கிச் செயல்படுகிறார். புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக!

---

***<u>இதன் மூல நகல்</u> 8/11/1985இல் குருதேவரின் தலைமை அலுவலகப் பொறுப்பாளர், வேலூர் சுடலை ஈசுவரி சன்னிதானம், சித்தரடியான் திரு P.பிச்சைமணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.***

# <u>பதினெண்சித்தர்கள் வழங்கிய இந்தியத் திருநாள்</u>

## <u>தீவாளி - விளக்கம்</u>

தீ ஆவளி சித்தர்கள் உருவாக்கிய திருநாள். கார்த்திகைக்கு அகல் விளக்குகளை வழிபாடு செய்வது போல், தீ ஆவளிக்கு குத்துவிளக்கு ஏற்றியும், தீ வளர்த்தும் (ஐந்தீ) ஒளியை வழிபடுவதுதான் தீ ஆவளித் திருநாள். இந்த ஒளி வணக்கமே இம் மண்ணுலகை அண்டபேரண்டங்களோடு இணைக்கிறது.

## <u>தீவாளி - வரலாறு</u>

தீ ஆவளி எனும் திருநாள் அனாதிக்காலம் தொட்டு (முதல் உகத்தில் இருந்து) நிகழ்ந்து வருகிறது. பாரத காலத்தில் (மூன்றாவது உகத்தில்) நரகாசுரன் தீ ஆவளி அன்று போரிட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சி ஏதேச்சையாக நடந்ததால்; அது வரலாற்று நிகழ்ச்சியாகவும், அதனாலேயே தீ ஆவளித் திருநாள் தோன்றியது என்ற தவறான கருத்து உருவாக்கப்பட்டு விட்டது. எனவே **<u>தீ ஆவளி திருநாளுக்கும் நரகாசுரன் மடிவுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை</u>**.

இதேபோல், இன்றுள்ள சமண மதத்தைத் தோற்றுவித்த 27-வது தீர்த்தங்கரரான மகாவீரர் நிர்வாண முத்தி நிலையை அடைந்தது இதே தீ ஆவளி நன்நாளில்தான். இதன்படி சமணர்கள் (சைனர்கள் = அருக சமயத்தவர்) தங்களுடைய மத குருவான மகாவீரர் நிறைவு பெற்றதை ஒட்டிய நாளான இந்நாளை தங்கள் தலைவரால்தான் தோன்றியது எனக் கூறி வருகிறார்கள். இதுவும் ஒரு வரலாற்று நிகழ்ச்சியே!

“முருகன் தேவசேனுதிபதியாகப் பொறுப்பேற்றதும், சிவபெருமான் திரிபுரம் எரித்ததும், இறையனுர் இம்மண்ணுலகை அருளாட்சிக்குரியதாக ஏற்றதும்!, பதினெண்சித்தர்கள் இம்மண்ணுலகிற்கு வந்ததும், இந்து மதத்தை வழங்க ஆரம்பித்ததும், முதல் கருவறையை அமைத்ததும் இத் தீ ஆவளி நன்நாளில்தான் எனக் குருபாரம்பரியம் மிகத் தெளிவாகப் பாராட்டிக் குறிக்கிறது. எனவே, **தீ ஆவளி தமிழர் திருநாள். மனித நாகரீகமும் பண்பாடும் வளர்ந்து மனிசன் மனிதனுக மாறிய பொன் நாள்** ...”

**அனுதிக்கால கருவூருர் குருபாரம்பரிய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை.**

# தீவாளி - கொண்டாடும் முறை

‘தீ ஆவளி’ பற்றிக் குறிக்கும் குருபாரம்பரிய வாசகங்கள் இன்றைய தமிழகத்தைக் காக்கும் ஒரு வலிமை மிகு சாதனம் ஆகும். “**தமிழர்கள் தீவாளித் திருநாள் தங்களுடைய திருநாள்தான்**” என்ற பேருண்மையை உணர்ந்தும், நம்பியும் செயல்பட்டால்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் வளர்ச்சியையும், தமிழினத்தின் உரிமையையும் பேண முடியும். இதற்காகத் தீவாளி எப்படிக் கொண்டாடப்பட வேண்டுமென்பதை விளக்குகிறேம்.

பதினெண்சித்தர்கள் தமிழ்மொழியின் ஒலி அலைகளின் மூலம் தனிமனிதர்கள் தங்களுடைய முன்னேர்களில் பிறப்பெடுக்காமல் அலைபவர்களின் ஆவி, ஆன்மா, ஆருயிர் எனும் மூன்றையும் ஆண்டுக்கு ஒருமுறை தீவாளி அமாவாசை அன்று எண்ணை நீராடிப் புத்தாடை அணிந்து அவரவர் வசதிப்படி புரு, கோழி, ஆடு, மீன், ..... பலியிட்டு அழைத்து, விருந்திட்டு மகிழும் திருநாளாகவே தீவாளித் திருநாளைப் படைத்தார்கள்.

# (1) <u>கொடிநிலை வழிபாடு</u>

அமாவாசையின் அதிகாலையில் குடும்பத் தலைவர்கள் எண்ணை நீராடி, புத்தாடை அணிந்து, தீ + ஆவளி => அகல் விளக்குகளை விண்வெளியின் மீன் (விண்மீன்) கூட்டத் தோற்றமாக வீட்டின் உள்ளும் புறமும் ஏற்றிடல் வேண்டும். வாசலில் புதுமணல் பரப்பிக் குண்டம் அமைத்து நெருப்பு வளர்த்துப் பலிகொடுத்து மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றி அவ்வக்காலப் பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் வழங்கப்படும் பூசாமொழி வாசகங்களைக் கூறிக் **“கொடி நிலை வழிபாடு”** என்பதனை நிறைவேற்ற வேண்டும். இதில் விண்மீன்கள், கோள்கள், இராசிகள், பிண்ட, அண்ட, பேரண்ட, அண்டபேரண்டத்தவர்கள், இம்மண்ணுலக உருவ, அருவ, அருவுருவங்கள் .... முதலிய அனைவரும் வழிபடப் படுகிறார்கள்.

**அமாவாசை நாளில் மேற்குறித்த அனைவரும் அழைப்பை ஏற்று வருவர். அமாவாசை விரதத்தின் பெயரால் மரக்கறி உணவுதான் படைத்தல், உண்ணல் .... என்ற பழக்கம் பிற்காலத்திய பழக்கம். அமாவாசையில் இறைச்சியுணவு (புலால், மாமிசம்) படைக்கப் பட்டேயாக வேண்டும்.**

<u>**குறிப்பு:-** தீவாளி அல்லாத மற்ற அமாவாசைகளில் குறிப்பிட்டத் தனிமனிதருக்காகப் பூசை செய்தால், இறந்து போன அந்த மனிதன் **எந்த உணவை விரும்பி உண்பாரோ (மரக்கறி உணவு அல்லது இறைச்சி); அந்த உணவைத்தான்** படையலாகப் போட்டு வழிபட வேண்டும். அப்படியல்லாமல் **அமாவாசைப் பூசையென்றால் இறைச்சி உணவே கூடாது என்று மறுத்து மரக்கறி உணவையே படைப்பது தவறு! தவறு!! தவறு!!!**</u>

## (2) கந்தழி வழிபாடு

கந்தழி வழிபாடு - அதாவது சூரியனை வழிபடல். பகலில் உருமவேளை அல்லது உச்சி வேளை எனப்படும் கலசப் பூசைக்குரிய (தாந்தரீக, ஏந்தரீக, மாந்தரீகப் பூசைகளுக்கும் உரிய) 11 முதல் 1½ வரை = 2½ மணி நேரம் = 1 சாமம் வீட்டில் செய்த பலகாரங்கள்; காலையில் பலி கொடுத்ததைச் சமைத்த உணவு, பூசைக்குரிய பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு, பூ, புகை (சாம்பிராணி, ஊதுபத்தி), கற்பூரம் ... முதலியவைகளை எல்லாம் வைத்து கந்தழி எனப்படும் சூரிய வழிபாட்டைச் செய்ய வேண்டும்.

## (3) வள்ளி வழிபாடு

மாலையில் வள்ளி வழிபாடு (வள்ளி நிலை வழிபாடு) - வீட்டின் முற்றத்தில் அல்லது நடுவீட்டில் அல்லது பூசையறையில் ஐந்து (5) திரியிட்ட குத்துவிளக்கை ஏற்ற வேண்டும்.

அதற்கு நேராகச் சுவற்றில் நிலவைப் போல் வட்டமாக அவரவர் விருப்பப்படி, விருப்பமான அளவில் சந்தனத்தாலோ அல்லது மஞ்சளாலோ பூசி மெழுக வேண்டும். அதில் திருநீற்றாலும், குங்குமத்தாலும் பட்டைகளும், பொட்டுக்களும் 3 முதல் 48 வரை வைத்து அலங்கரிக்க வேண்டும்.

ஒரு மண் கலயத்தில் மஞ்சள் நீர் நிரப்பி 1. மாவிலை 2. வேப்பிலை 3. அரச இலை 4. ஆலிலை 5. வில்வ இலை 6. தென்னைக் குருத்தோலை 7. பனைக் குருத்தோலை 8. துளசி இலை 9. அருகம்புல் முதலியவைகளை வைத்து, நடுவில் தேங்காய் வைத்து, நூல் சுற்றி, கலசம் தயாரித்து வைக்க வேண்டும். வசதி வாய்ப்புகளுக்கேற்ப எல்லோரும் புத்தாடையணிந்து பால், பழங்கள், வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், பால் பொங்கல், பலகாரங்கள்,

... முதலியவைகளைப் படைத்து நிலவை (திங்களை) வழிபட வேண்டும்.

வசதி வாய்ப்புக்களுக்கேற்ப அவரவர் வீட்டு வாசலிலோ, தெரு முனையிலோ, கோயில்களின் வாசல்களிலோ ஒன்று முதல் ஒன்பது சொக்கப்பானைகள் (வைக்கோல், சோளத்தட்டை, ஓலைகள், விறகுகள் முதலியவைகளால் கோபுரம் போல் கட்டி நிறுத்தப் படுபவை) நிறுத்திடல் வேண்டும். அவரவர் வீட்டில் நிலவுப் பூசை குத்துவிளக்கின் முன் செய்து முடித்த பிறகு வீட்டினுள் ஏற்றிய கற்பூரம் அல்லது குத்துவிளக்கு (நெருப்பை) தீயை பயன்படுத்தித்தான் சொக்கப்பானை எரிக்க வேண்டும். இந்த சொக்கப்பானையின் சாம்பலை அவரவரின் வீடு, நிலம், காடு, தோட்டம், வயல் முதலிய எல்லா இடங்களிலும் தூவி விடுவதால் எல்லா வகையான தீமைகளும் தடுக்கப்பட்டும், அகற்றப்பட்டும் தேவையான நன்மைகள் விளைந்திடும்.

எனவே, “தமிழர்கள் அனைவரும் இம்மண்ணுலகுக்குரிய **கொடிநிலை வழிபாடு, கந்தழி நிலை வழிபாடு, வள்ளி நிலை வழிபாடு** எனும் முப்பெரும் வழிபாட்டினையும் தீவாளியை முன்னிட்ட அமாவாசை நாளில் கொண்டாடி எல்லாவித நன்மைகளையும் அடைய வேண்டும். இதன்மூலம் தமிழர்கள் பதினெண்சித்தர்கள் வழங்கிய இந்துமதப்படி வாழ்ந்து மொழிப்பற்று, இன ஒற்றுமை, நாட்டு உரிமை, பண்பாட்டுப் பிடிப்பு முதலியவற்றில் விழிப்போடும், செழிப்போடும் என்றென்றும் வாழ்ந்திடுவார்கள் .....” என்ற பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அமராவதி ஆற்றங்கரைக் கருவூரரின் குருபாரம்பரிய வாசகங்களைப் பற்றி கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை குறிக்கிறார்.

கி.மு.150க்கும் கி.மு.100க்கும் இடைப்பட்ட காலத்தில் வடஆரியர் தமிழினத்தைப் பல்வேறு போர்முறைகளால், உள்நாட்டுப் பூசல்களால், பிரிவினைகளால், சூழ்ச்சிமிகு சண்டைச் சச்சரவுகளால் ..... மிகப் பெரிய அழிவையும், வீழ்ச்சியையும், தாழ்ச்சியையும் அடையுமாறு

செய்தனர். அப்பாவித் தமிழினம் கரடிப்போர் முறையால் கதிகலங்கிக் கருத்தழிந்து சிதறிச் சீரழிவுற்றது. அந்த அவலக் கோலங்களேயும், வடஆரிய மாயவலேகளேயும் அகற்றப் பல நூற்றுண்டுகள் தமிழினத் தலேவர்கள் பகுத்தறிவோடும், தன்னலமின்றியும், அற்ப ஆசைகளுக்கு அடிமையாகாமலும் ... போரிட வேண்டுமென்று உணர்ந்தும், உணர்த்தியும் தமிழிலக்கியங்களேத் தொகுத்தார்; எண்ணற்ற இலக்கியங்களேயும் எழுதியும், எழுதுவித்தும் செயல்பட்டார்; மூன்று பெரும் சத்திகளான **1. குரு பாரம்பரியம், 2. அரச பாரம்பரியம், 3. இலக்கிய பாரம்பரியம் எனும் சித்தர்களின் முக்கோணக் கோட்டை**யை வலிமைப்படுத்திஞர் .... பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி.

இன்றைக்கு தமிழர்களிடையே தீவாளியைக் கொண்டாடுவதைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுவதால் இ.ம.இயின் இன்றைய ஈடுஇணேயற்ற தலேவரும், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியும் ஆகிய இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் தமிழக மக்களுக்கு தீவாளி பற்றிய இக் குருபாரம்பரிய வாசகத்தை அருளுகின்றார்.

குருதேவரிடம் விளக்கம் கேட்டு இக்கட்டுரையினே எழுதியவர்கள் "குருதேவர்" மாத ஏட்டின் ஆசிரியர் குழுவினர்.

---

***இதன் மூல நகல் 1984இல் அச்சிடப் பட்ட குருதேவர் ஆண்டு மலரில் வெளியாகிய கட்டுரை.***

அச்சிட்டோர் தரும் குறிப்பு:-

***இந்தக் கட்டுரையில் குறிப்பிடப் பட்டிருக்கும் கொடிநிலே, கந்தழி, வள்ளி நிலேப் பூசைகளுக்கு உரிய பூசாமொழி வாசகங்கள் குருதேவர் அருளிச் செய்த 'மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழி' என்ற புத்தகத்தில் உள்ளன. அனேவரும் வாங்கிப் பயன்படுத்தலாம்.***

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த ‘குமரிக்கண்டம்’.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அறுதிக் காலத்தில் அதாவது கி.மு. 43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** அருளூறு அமுதத் தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** **தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு** எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் **12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.

---

<u>**மேலும் விளக்கங்களுக்கு தொடர்பு கொள்க:**</u>

1. **சித்தரடியார் திரு பாலாசி, கன்னமங்கலம் (வேலூர்), 8056508199.**
2. **சித்தரடியான் திரு செந்தில், சென்னை, 8608069545.**
3. **சித்தரடியான் திரு பிரபு, சென்னை, 9444025181.**

-----------------------------------

## இது ஓர் இந்து இலக்கியக் கழக வெளியீடு

**மெய்யான இந்து மத ஆண்டு 43,73,116.**